## <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

OS No. 132/2014 22.03.2021 PW2

பெயர் : வீரராஜ் த/பெ: அப்பு

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கிடைத்சொத்தை முழுவதும் அமராவாதிக்கு பாத்தியப்பட்டதாகும். அவருக்கு நடேசன், வெங்கடாசலம், மாதன், குழந்தைம்மாள், அப்பு, கோசலை ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். இதில் அமராவாதி இறந்துவிட்டார். அவரது வாரிசுகளில் மாதன், குழந்தைம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் இல்லாமல் இறந்துவிட்டார்கள். வெங்கடாசலம் பிறகு என் அப்பா வாரிசுகளுடன் இறந்துவிட்டார்கள். நடேசன் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். அவருக்கும் வாரிசு உண்டு. வெங்கடாசலத்தின் மனைவி மற்றும் மக்கள் ஆகியோர்கள் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 4ம் வாதி ஆவார்கள் என்றால் சரிதான். வெங்கடாசலத்தின் வாரிசுகள் ஆகிய 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாகம் பிரித்து கொடுக்க எனக்கு ஆட்சேபனை இல்லை.

**<u>4 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய அப்பா பெயர் அப்பு. அவர் தான் இவ்வழக்கின் 1ம் வாதி என்றால் ஆமாம். என் அப்பாவின் அப்பா பெயர் தாண்டவன் ஆகும். என் தந்தை வழி பாட்டியின் பெயர் அமராவதி ஆகும். வழக்கிடை A மற்றும் B அட்டவனை சொத்துக்கள் அனைத்தும் அமராவதி சொத்து என்றால் ஆமாம். வழக்கிடை A அட்டவணை சொத்து என் பாட்டி அமராவதி நத்த நிலவரி திட்டத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட பட்டாவின் படி தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் ஆமாம். ஆனால், சொத்து விவரத்தில் அதில் நத்தம் என்ற வகைப்பாடு கொண்டது என்று சொல்லவில்லை என்றால் ஆமாம். B அட்டவனை என் தாத்தா தாண்டவனால் என் பாட்டி அமராவதிக்கு ஜீவனாம்சமாக எழுதி கொடுத்த சொத்து என்றால் ஆமாம். என் பாட்டி இந்து மததத்தை சேர்ந்தவர் என்றால் ஆமாம். இவ்வழக்கில் 4 பிரதிவாதியாக காண்பிக்கப்பட்ட கோசலை தான் என் பாட்டி அமராவதிக்கு அனைத்துவிதமான சவரச்சனைகளும், மருத்துவ உதவிகளும் செய்தார் என்றால் இல்லை. மேற்படி, A மற்றும் B அட்டவனை சொத்துக்களை பொறுத்து என் பாட்டி உயிருடன் இருக்கும்

போது நல்ல நிலையில் ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் அவர் படுத்த, படுக்கையாக இருந்தார். 10.08.2001ம் தேதியன்று அந்த உயில் எழுதி வைக்கப்பட்டது என்றால் எங்களிடம் சொல்லாமல் எழுதி வைத்துவிட்டார். 10.08.2001ம் தேதிய உயில் சசனத்தின் அடிப்படையில் 4ம் பிரதிவாதி கோசலை மேட்டுர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 219/2019 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். மேற்படி உயிலின் அடிப்படையில் A அட்டவனை சொத்து முழுவதும் 4ம் பிரதிவாதி கோசலைக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். அதேபோல் இவ்வழக்கில் கண்டுள்ள B அட்டவணையில் கண்ட சொத்துக்களை 4ம் பிரதிவாதி அவரது தாயாருக்கு செய்த சவரச்சனைக்காக, மருத்து செலவினங்களாக பெற்ற கடனுகளை அடைக்க 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்து விட்டார் என்றால் விற்பனை செய்து விட்டார். மேற்படி 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட விற்பனை ஆவணம் நாளது தேதி வரை அமலில் உள்ளது என்றால் ஆமாம். அதன் அடிப்படையில் B அட்டவணை சொத்தை விலைக்கு வாங்கிய கிரையத்தாரர்கள் அவர்கள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து விட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால், சுவாதீனம் அவர்கள் வசம் தான் உள்ளது என்றால் ஆமாம். நான் வழக்கு சொத்தை எப்போது பார்த்தேன் என்றால் சிறு வயதில் பார்த்தேன். மேற்படி, A அட்டவணை , B அட்டவனை சொத்துக்களை தவிர என் தாத்தா தாண்டவன் பெயரில் பிதுரார்ராஜித வகையில் வந்த சொத்துக்கள் இன்னும் உள்ளது என்றால் இல்லை. மாதன் பெயரில் உள்ள சொத்து தான் உள்ளது. நான் சொல்லும் சங்கதி பொய் என்றும், 4ம் பிரதிவாதி வாதியாக இருந்து அசல் வழக்கு எண் 240/2013 என்ற வழக்கு இதே நீதிமன்றத்தில் பாக பிரிவினைக்காக தாக்கல் செய்துள்ளார் அதில் கண்ட சொத்துக்கள் அனைத்தும், தாண்டவம் பெயரில் உள்ள சொத்து என்றால் அது உண்மை இல்லை. என் தகப்பானரான 1ம் வாதி 02.03.2018ல் இறந்துவிட்டார். இவ்வழக்கில் கண்ட 2 முதல் 4 வாதிகள் எங்களுடன் உறவாக தான் இருந்து வருகிறார்கள். என்னுடன் உறவாக தான் இருந்து வருகிறார்கள் என்றால் ஆமாம். இ.ம.எண் 742/2018 மனுவில் பிரமாண வாக்குமூலம் நான் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். 2 முதல் 4 வாதிகள் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். 2014 லிருந்து இன்று வரை இவ்வழக்கு தள்ளுபடி ஆகாமல் இருந்து வரும் சூழ்நிலையில் 2 முதல் 4 வாதிகள் என் அப்பா வாரிசுகளை சேர்க்க மனு தாக்கல் செய்யாமல் நான் தனிப்பட்ட முறையில் மனு தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னால் அந்த விவரங்கள் எனக்கு தெரியவில்லை. என் அப்பா இறந்த பின்னர், குறிப்பிட்ட கால கட்டத்தில் நான் மற்றும் 2 முதல் 4 வாதிகள் எந்த ஒரு மனுவும், எங்களை வாரிசுகளாக சேர்க்க மனு தாக்கல் செய்யாத காரணத்தினால் என் அப்பாவின் இறப்பின் காரணமாக இவ்வழக்கு அவரை பொறுத்து Abeat ஆகிவிட்டது என்பதால் அவர் எந்த பரிகாரமும் கேட்கமுடியாது. அவர்களது வாரிசுகளான நானும், என் அப்பாவின் வாரிசு என்ற முறையில் பரிகாரம் எதுவும் கேட்கமுடியாது என்றால் தவறு. 1ம் வாதி, 5 மற்றும் 6 வாதிகளான எங்களை பொறுத்து இவ்வழக்கு இந்திய காலவரை சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதால் என் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

( வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

Sd/ Thiru. M. Balamurugan,
சார்பு நீதிபதி, மேட்டூர்.